நெல்லியாளம் நகராட்சி அலுவலகம்,
பந்தலூர், நீலகிரி மாவட்டம்.

## சாதாரண கூட்டம் 31/07/2019, புதன்கிழமை

**பொருள் எண்.1**

2019-2020ம் ஆண்டு Turif திட்டத்தின் கீழ் செம்மண் வயல் வார்டு எண்.16, சாமியார் காலனி , அத்திக்குன்னா முதல் கரியசோலை இணைப்பு சாலை வார்டு எண்.3 , தேவாலா காவல் நிலைய சாலை வார்டு எண்.11, நெல்லியாளம் வாழவயல் சாலை வார்டு எண்.1 மற்றும் தேவாலா பஜார் முதல் ரவுஸ்டன்மலை சாலை வார்டு எண்.9,10ல் ரூ.300.00 இலட்சத்திற்கு தார் சாலை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.2**

2019–2020ம் ஆண்டு பொது நிதியின் கீழ் நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் செயல்படும் மோட்டார் பம்பினை இணைக்குவதற்கு வழங்கப்படும் ஊதிய வழங்கும் பணிக்கு ரூ.9.80 இலட்சத்திற்கு 24.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும்

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்த தொகை |
|---|---|---|
| 1 | திரு.தெய்வேந்திரன் | 81600 |
| 2 | திரு.பாபுவர்கீஸ் | 85200 |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.தெய்வேந்திரன் என்பவர் ரூ.81600/- குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலரின் ஒப்புதலுக்கு

**பொருள் எண்.3**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 மூச்சுக்குன்னு என்னும் பகுதியில் ஆதிவாசி மக்கள் (பணியர் இனம்) வாழ்ந்து வருகிறார்கள். ஆதிவாசி மக்கள் சுமார் 50 குடும்பங்களுக்கு மேல் இங்கு வசித்து வருவதால் அவர்களுக்கு சரியான சாலை போக்குவரத்து இல்லாத காரணத்தால் மற்றும் பாதை மிகவும் குருகலாகவும் மரம் செடி, கொடிகள் வளர்ந்து போக்கு வரத்து மிகவும் சிரமமாகவும் இருப்பதால் மலை சரி இடத்தில் அமைந்துள்ளதால், மழைநீர் நடைபாதையின் மீதே செல்லுவதால் சாலையை அகலபடுதூதவும் குண்டும் குழிகளை சமன் செய்யும் ம்க்களின் கோரிகையை ஏற்று மாவட்ட ஆட்சியரின் உத்திரவின் போரில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ரூ.1.80 இலட்சம் செலவில் இப்பணியினை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ல் கீழ் பணி மேற்கொள்ளப்பட்ட பணிகள் திரு.குமார், ஒப்பந்ததாரருக்கு தொகை ரூ162070/- வழங்கவும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.4**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வறட்சியின் காரணமாக பொது மக்களுக்கு குடிநீர் வழங்க பற்றாக்குயைாக உள்ளதால், டேங்கர் லாரியின் மூலம் வழங்க அவசியம் ஏற்படுகிறது. மேலும் தேர்தல் நடத்தை விதி அமுலில் உள்ளதால், ஒப்பந்தப்புள்ளிகள் மேற்கொள்ள இயலாத காணரத்தினால் குடிநீர் பணி என்பதாலும் அவசரம் அவசியம் கருதி நகராட்சியின் சட்ட விதி பிரிவு 15ன்கீழ் பணிகள் மேற்கொள்ள ஆணையாளரின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது மேற்குறிப்பிட்ட இப்பணியினை திரு.பாலசந்தர், ஒப்பந்ததாரர் என்பவருக்கு ரூ991458/- வழங்கவும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

| |
|---|
| **<u>பொருள் எண்.5</u>**<br>நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வறட்சியின் காரணமாக பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய குடிநீர் லாரியின் மூலம் வழநுக வேண்டியுள்ளதால், பணியின் அவசரம் அவசியம் கருதி நகராட்சியின் சட்ட விதி பிரிவு 15ன் கீழ் பணிகள் மேற்கொள்ளள ஆணையாளரின் அனுமதிக்கு சமா்ப்பிக்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட பணியினை திரு.பாலசந்தா், ஒப்பந்ததாரா் மூலம் மேற்கொண்டதற்கும் தொகை ரூ.999348/- ஆணையாளா் மற்றும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் |
| **<u>பொருள் எண்.6</u>**<br>நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட ஏலமன்னா உரகிடங்கு பகுதியில் உரங்கள் தயாரிக்கும் பணிக்கு மக்கும் குப்பைகளை பொடியாக்கும் பணிக்கு Organic shredder அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு இப்பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் |
| **<u>பொருள் எண்.7</u>**<br>நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பந்தலுாா் பகுதியில் குடிநீா் குழாய்கள் அமைக்க ரூ.1.50 இலட்சம் செலவு மதிப்பீட்டில் தயாாிக்கப்பட்டு ஆணையாளா் மற்றும் தனி அலுவலாின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் |
| **<u>பொருள் எண்.8</u>**<br>நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட உப்பட்டி பூதான்க்குன்னு பகுதியில் இன்டா்லாக் அமைப்பதற்காக ரூ.8.80 இலட்சம் செலவில் மதிப்பீடு தயாா் செய்யப்பட்டு ஆணையாளா் மற்றும் தனி அலுவலாின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் |
| **<u>பொருள் எண்.9</u>**<br>நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட தேவாலா அட்டி டேன் டீ குடியிருப்பு அருகில் சிமெண்ட் சாலை அமைக்க ரூ.5.00 இலட்சம் செலவு மதிப்பீட்டில் தயாாிக்கப்பட்டு ஆணையாளா் மற்றும் தனி அலுவலாின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் |
| **<u>பொருள் எண்.10</u>**<br>நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட தேவாலா பள்ளி வாசல் அருகில் நடைபாதையுடன் கூடியி தடுப்பு சுவா் அமைக்க ரூ.5.00 இலட்சம் செலவு மதிப்பீட்டில் தயாாிக்கப்பட்டு ஆணையாளா் மற்றும் தனி அலுவலாின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் |
| **<u>பொருள் எண்.11</u>**<br>நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பொன்னுாா் பகுதியில் நடைபாதையுடன் கூடிய தடுப்பு சுவா் அமைக்க ரூ.6.00 இலட்சம் செலவு மதிப்பீட்டில் தயாாிக்கப்பட்டு ஆணையாளா் மற்றும் தனி அலுவலாின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் |

**பொருள் எண்.12**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட தேவாலா பகுதியில் அமைந்துள்ள கட்டணக் கழிப்பிடத்தை பராமரிப்பு செய்ய ஆகும் செலவு தொகை ரூ.5.00 இலட்சம் செலவு மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**பொருள் எண்.13**

நெல்லியாளம் நகராட்சியின் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2021–க்கான வரைபடங்கள் Auto Cad DWG/ DXF/ JPEG or Tiff 300 DPI, போன்ற படக்கோப்புகள் வடிவத்தில் தயாரிக்கப்பட வேண்டியுள்ளதால் மேற்படி பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.2.00/– லட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.14**

நெல்லியாளம் நகராட்சியில் பொறியியல் பிரிவில் குடிநீர் விநியோக உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு.தா.அறிவழகன் என்பவர் வயது முதிர்வில் 31/05/2019–ல் பணி ஒய்வு பெற்றுவிட்டார். இந்நகராட்சி 40 ஆயிரம் மக்கள் தொகையை கொண்டும், 94 சதுர கிலோ மீட்டர் சுற்றளவும் உள்ளது. அந்த அளவிற்கு பொதுக்குடிநீர் குழாய்கள், வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்புகள், கிணற்று நீர் குழாய்கள் மற்றும் போர்வெல் குழாய்கள் உள்ளன. இந்நகராட்சியில் தற்பொழுது உள்ள மூன்று குடிநீர் விநியோக உதவியாளர்களை வைத்து மேற்காணும் குழாய் பணிகளை மேற்கொள்வது நிர்வாகத்திற்கு பெரிதும் சிரமமாக உள்ளது. இந்நகராட்சியின் 2018–19 ஆம் ஆண்டு மொத்த வருமானத்தில் சம்பளத் செலவினம் மற்றும் ஒய்வூதியச் செலவினம் 31 சதவிகிதம் மட்டுமே செலவிடப்படுகிறது. எனவே பொதுமக்கள் மற்றும் நிர்வாக நலன் கருதி காலியாக உள்ள ஒரு குடிநீர் விநியோக உதவியாளர் பணியிடத்தை பூர்த்தி செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.15**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் முதியோர் உதவித்தொகை மற்றும் இதர உதவித்தொகைகள் பெற வறுமைக்கோடு பட்டியலில் பெயர் சேர்த்து பட்டியல் எண் வழங்ககோரி பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு வறுமைக்கோடு பட்டியல் எண் வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | பட்டியல் எண் |
|---|---|---|
| 1 | திரு.தமிழ்செல்வன், த.பெ.மாரிமுத்து, க.எண்.6/121, ஆமைகுளம் | OAP BPL No.162 |
| 2 | திருமதி.வீரம்மா, க.பெ.மாரியப்பன், க.எண்.1/521P, மேஸ்திரிகுன்னு, உப்பட்டி. | OAP BPL No.163 |
| 3 | திருமதி.தெய்வானை, க.பெ.பாலகிருஷ்ணன், க.எண்.19/117E, பெருங்கரை, உப்பட்டி. | OAP BPL No.164 |
| 4 | திருமதி.ஜெயகலா, த.பெ.தேவேந்திரன், க.எண்.1/301, நாரங்காவயல், உப்பட்டி. | OAP BPL No.165 |
| 5 | திரு.பொன்னம்பலம், த.பெ.வடிவேல், க.எண்.6/306, பாண்டியார் குடோன். | OAP BPL No.166 |
| 6 | திருமதி.சிவபாக்கியம், க.பெ.அருணாச்சலம், க.எண்.10/45–1, கைதக்கொல்லி, தேவாலா. | OAP BPL No.167 |
| 7 | திரு.சதாசிவம், த.பெ.மெய்யன், க.எண்.3/751, வாழவயல், தேவாலா. | OAP BPL No.168 |
| 8 | திரு.குருநாதன், த.பெ.நடேசன், க.எண்.7/59, நாடுகாணி, கூடலூர். | OAP BPL No.169 |
| 9 | திருமதி.பார்வதி, க.பெ.வேலு, க.எண்.5/13C3, புளியம்பாறை, சீனக்கொல்லி | OAP BPL No.170 |

**அலுவலக குறிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.16**

நெல்லியாளம் நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் மினிலாரி TN438153 எண் கொண்ட வாகனத்திற்கு 6 எண்ணம் டயர்கள் ரீபெல்ட் செய்யும் பணிக்கு 11/07/2019 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளி அளித்தவரின்பெயர் | விலை விகிதம் ரூ. |
|---|---|---|
| 1 | Popular Tyres, Gudalur | 24000/– |
| 2 | Power Fin Tyres, Gudalur | 23700/– |
| 3 | Tyrex, Gudalur | 22800/– |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்தவிலை விலைப்புள்ளி அளித்துள்ள Tyrex, Gudalur நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கவும், பட்டியல் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.17**

நெல்லியாளம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு சொந்தமான TN43Y8897 TATA ACE வாகனத்திற்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்து தகுதி சான்று பெறும் பணிக்கு 11/07/2019 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளி அளித்தவரின்பெயர் | விலை விகிதம் ரூ. |
|---|---|---|
| 1 | ஸ்ரீ லட்சுமி ஆட்டோ கேரேஜ், பந்தலூர் | 18350/– |
| 2 | SRK ஆட்டோ கேரேஜ், கூடலூர் | 18750/– |
| 3 | பிரண்ட்ஸ் ஆட்டோ கேரேஜ், பந்தலூர் | 18600/– |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்தவிலை விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ லட்சுமி ஆட்டோ கேரேஜ், பந்தலூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கவும், பட்டியல் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.18**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பந்தலூர் பகுதியில் நகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அம்மா உணவகத்திற்கு 01/05/2019 முதல் 31/07/2019 முடிய மூன்று மாதங்களுக்கு எம்.கமருன்னிசா, M.A.R.காய்கறி வியாபாரம், பந்தலூர் என்பவர் மூலம் காய்கறிகள் பெறப்பட்டு வந்தது. தற்போது 01/08/2019 முதல் 31/10/2019 முடிய மேலும் மூன்று மாதங்களுக்கு மேற்படி எம்.கமருன்னிசா, M.A.R.காய்கறி வியாபாரம், பந்தலூர் அவர்கள் மூலம் அம்மா உணவகத்திற்க காய்கறிகள் பெற்றுக்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

தனி அலுவலர்
நெல்லியாளம் நகராட்சி